7—

நியாய விலைக் கடை கட்டடம்

*33493— **திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 16-வது வார்டு, கைலாச விநாயகர் சன்னதி தெருவிலுள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன். மக்களின் முதல்வர் ஏழையெளிய மக்களின் இணையில்லாத தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய பதிலைத் தொடங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 16-வது வார்டு, கைலாச விநாயகர் சன்னதி தெருவில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்திவரும் அமுதம் நியாய விலை அங்காடி எண் 4 வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்கு தகுதியான இடம் தேர்வு செய்யப்பட்டு, விரைவில் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைமேகம் கண் திறந்தால் மின்னல் தோன்றும்! வான் மேகம் வாய் திறந்தால் இடிகள் முழங்கும்! அலை கடல்*

2014 டிசம்பர் 4]

ஆர்ப்பரித்தால் சுனாமி பொங்கும்! அம்மாவின் பேச்சில் அனல் தெறிக்கும்! அம்மாவின் வீச்சில் புரட்சி பிறக்கும்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா முன் அமர தயங்கியவர்கள், அரிமா முன் அஞ்சி நடுங்கியவர்கள் தள்ளி வந்தாலும், தள்ளாடி வந்தாலும், தடுமாறி வந்தாலும், இடம் மாறி வந்தாலும், ஆயிரம் கனவு அடுக்கடுக்காகக் கண்டாலும் தமிழர் ஆயுள் முழுக்க அம்மாதான் நிரந்தர முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து, அவர் வீற்றிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட 16-வது வார்டு, தேவகோட்டை நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் அமைத்துத் தருவதற்கு ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

பேருந்து வசதி

***18360— திருமதி ர. சுபா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், கவர்பனை பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*